நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 நாகப்பட்டினம்

வழக்கு எண் : CC 96/2015

வழக்கு சாட்சி : PW6 (LW10)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : யுவராஜ் | ஜாதி | : |
| தந்தை பெயர் | : ராஜேந்திரன் | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : 41/2025 |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **02.04.2025**

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

நான் தற்சமயம் வெளிப்பாளையத்தில் வசித்து pick up வாகனம் வைத்து வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் புகார்தாரர் நடராஜன் மற்றும் தர்மராஜன் ஆகியோர்கள் எனது குடும்ப நண்பர்கள் ஆவார்கள். தர்மராஜன், தர்மராஜனுடைய அக்கா தாமரைச்செல்வி என்பவர் அவரது அப்பாவை ஏமாற்றி சொத்துகளை எழுதி வாங்கிக் கொண்டதாக கூறினார். அந்த எழுதி வாங்கிக் கொண்ட சொத்து பத்திரத்தை ரத்து செய்ய வேண்டும் என்று கூறினார். அது சம்பந்தமாக ரத்து செய்வதற்காக என்னுடன் ராஜேஷ், தர்மராஜன், அவரது அப்பா ஆகியோர்கள் சென்றோம். 20.09.2013 ம் தேதியன்று நாங்கள் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு ரத்து செய்வதற்காக சென்ற போது அலுவலகத்தில் இருந்த பாலசுப்பிரமணியம், சடாட்சரம் ஆகியோர்கள் ரத்து செய்ய முடியாது என்று கூறினார்கள். அதன் பின்னர், நாங்கள் வந்து விட்டோம். கடந்த 09.10.2013 ம் தேதி மீண்டும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு ரத்து செய்ய தர்மராஜனும், அவரது அப்பாவும் அழைத்தார்கள். மீண்டும் நான் ராஜேஷ், தர்மராஜன், அவரது அப்பா ஆகியோர்கள் சென்றோம். அன்றைய தினம், பத்திரத்தை ரத்து செய்ய சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். ஆவண எண். 1012/2013 ல் ரத்து ஆவணத்தில் சான்றிட்ட நகலில் சாட்சியாக 1வது கையொப்பம் செய்துள்ளேன். **அது அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆவண எண். 1013/2013 ல் ரத்து ஆவணத்தில்

சான்றிட்ட நகலில் சாட்சியாக 1வது கையொப்பம் செய்துள்ளேன். **அது அ.த.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

தர்மராஜன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். நான் மேற்படி ஆவண எண். 1012/2013 ல் ரத்து ஆவணத்தில் சாட்சியாக கையொப்பம் செய்ததற்கு 5,6 வருடங்களுக்கு முன்பு தெரியும். தர்மராஜனின் தகப்பனார் நடராஜனின் குடும்பம் பற்றி தெரியுமா என்றால் தெரியும். நடராஜனுக்கு இரண்டு ஆண், இரண்டு பெண் உள்ளார். 1வது எதிரி தாமரைச்செல்வியை தெரியும். அவரது கணவர் பெயர் தெரியாது. 1வது எதிரி தாமரைச்செல்வி அவரது கணவருடன் வசித்து வருகிறாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தர்மராஜன் சம்பந்தமான மற்ற ஆவணங்களில் நா'ன சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 20.9.2013 ல் நான் எந்த ஆவணத்திலும் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை. 2013 ம் ஆண்டு வாக்கில் நடராஜன் வேளாங்கண்ணியில் வசித்து வந்தார். 20.9.2013 ல் திருப்பூண்டி சார்பதிவாளர் அலுவலத்திற்கு நானும், ராஜேஷ்ம் செல்லவில்லை என்றால் சரியல்ல சென்றோம். 20.9.2013, 09.10.2013 ல் திருப்பூண்டி சார்பதிவாளர் அலுவலத்தில் எதிரி பாலசுப்பிரமணியன் மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தில் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும், தர்மராஜன் எனக்கு வேண்டியவர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 நாகப்பட்டினம்

வழக்கு எண் : CC 96/2015

வழக்கு சாட்சி : PW7 (LW11)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜேஷ் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | தர்மன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | 41/2025 |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **02.04.2025**

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

நான் தற்சமயம் நம்பியார் நகரில் வசித்து LIC AGENT ஆக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பபந்தமான விபரங்கள் எனக்கு தெரியும். இந்த வழக்கின் புகார்தாரர் நடராஜன் மற்றும் தர்மராஜன் ஆகியோர்கள் எனது குடும்ப நண்பர்கள் ஆவார்கள். தர்மராஜனுடைய அக்கா தாமரைச்செல்வி என்பவர் அவரது அப்பா நடராஜனை எட்டுக்குடி கோவிலுக்கு அழைத்து செல்வதாக கூறி ஏமாற்றி சொத்துகளை எழுதி வாங்கிக் கொண்டதாக நடராஜன், தர்மராஜன் என்னிடம் சொன்னார்கள். அந்த எழுதி வாங்கிக் கொண்ட சொத்து பத்திரத்தை ரத்து செய்ய வேண்டும் என்று கூறினார். அது சம்பந்தமாக ரத்து செய்வதற்காக என்னுடன் யுவராஜ், தர்மராஜன், அவரது அப்பா நடராஜன் ஆகியோர்கள் 20.09.2013 ம் தேதியன்று திருப்பூண்டி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு ரத்து செய்வதற்காக சென்றோம். அலுவலகத்தில் இருந்த பாலசுப்பிரமணியம், சதாசதம் ஆகியோர் பத்திரத்தை ரத்து செய்ய முடியாது என்று கூறினார்கள். அதன் பின்னர் நாங்கள் வந்து விட்டோம்.

பின்னர் மீண்டும் கடந்த 09.10.2013 ம் தேதி மீண்டும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு ரத்து செய்ய மேற்படி நான்கு பேரும் சென்றோம். அன்றைய தினம், பத்திரத்தை ரத்து செய்ய சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். ஆவண எண். 1012/2013 ல் ரத்து

ஆவணத்தில் சான்றிட்ட நகலில் சாட்சியாக 2 வது கையொப்பம் செய்துள்ளேன். **அது அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆவண எண். 1013/2013 ல் ரத்து ஆவணத்தில் சான்றிட்ட நகலில் சாட்சியாக 2 வது கையொப்பம் செய்துள்ளேன். **அது அ.த.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

தர்மராஜன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். நான் எனது போலீசார் விசாரணையில் தாமரைச்செல்வி அவரது அப்பா நடராஜனை எட்டுக்குடி கோவிலுக்கு அழைத்து செல்வதாக கூறி ஏமாற்றி சொத்துகளை எழுதி வாங்கிக் கொண்டதாக நடராஜன் என்னிடம் சொன்னதாக சொல்லி உள்ளேனா என்றால் நினைவு இல்லை. நான் மேற்படி ஆவண எண். 1012/2013 ல் ரத்து ஆவணத்தில் சாட்சியாக கையொப்பம் செய்ததற்கு 10 வருடங்களுக்கு முன்பில் இருந்தே தெரியும். மேற்படி ஆவணங்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும், தர்மராஜன் எனக்கு வேண்டியவர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.